# ‘எல் நினோ என்றால் என்ன? தமிழகத்தில் என்ன தாக்கம்?

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி !



புதுடெல்லி, ஆக.9-

பசிபிக் பெருங்கடலின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை வழக்கத்தை விட அதிகரிப்பதால் ஏற்படும் இயற்கையான காலநிலை நிகழ்வே ‘எல் நினோ’. இது உலகின் பல பகுதிகளில் மழைப்பொழிவு, வெப்பநிலை மற்றும் கடல் சூழலில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும். இந்தியாவில் குறிப்பாக பருவமழை பாதிக்கப்படுவதற்கும், கடல் வெப்பநிலை அதிகரிப்பதற்கும் எல் நினோ ஒரு காரணியாக அமையக்கூடும்.

இந்த நிலையில், எல் நினோ இந்திய பருவமழை, கடல் சூழலியல் மற்றும் தமிழக கடலோரப் பகுதிகளில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்து தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய புவி அறிவியல் அமைச்சகம் சார்பில் மத்திய இணை அமைச்சர் (தனிப்பொறுப்பு) டாக்டர் ஜிதேந்திர சிங் அளித்த பதிலில், இந்திய தேசிய கடல் தகவல் சேவை மையம் (INCOIS) உருவாக்கியுள்ள செயற்கை நுண்ணறிவு/இயந்திரக் கற்றல் (AI/ML) அடிப்படையிலான எல் நினோ-தெற்கு அலைவு (ENSO) கணிப்பு அமைப்பு, எல் நினோ நிலைமைகள் குறித்த முன்னறிவிப்புகளை வழங்கி வருவதாகத் தெரிவித்தார்.

### 2027 பிப்ரவரி வரை எல் நினோ நீடிக்க வாய்ப்பு

கடல் தொடர்பான சமீபத்திய தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி, 2026 மே மாதத்தில் எல் நினோ நிலை உருவாகியுள்ளது என்றும், 2026 ஜூன் முதல் 2027 பிப்ரவரி வரை எல் நினோ நீடிக்க 70 முதல் 90 சதவீதம் வரை வாய்ப்புள்ளதாக சமீபத்திய ENSO முன்னறிவிப்பு தெரிவிப்பதாகவும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

எல் நினோ காரணமாக அரபிக்கடல் மற்றும் வங்கக் கடலில் வளிமண்டலச் சுழற்சி மற்றும் கடல் நிலைகளில் மாற்றங்கள் ஏற்படக்கூடும். வரலாற்று ரீதியாக, நாட்டின் சில பகுதிகளில் எல் நினோ இந்திய கோடைக் கால பருவமழை குறைவுடன் தொடர்புடையதாக இருந்தாலும், இந்தியப் பெருங்கடல் இருமுனை நிலை (IOD), Madden-Julian Oscillation (MJO) மற்றும் பிராந்திய கடல்-வளி மண்டல தொடர்புகள் உள்ளிட்ட பல காரணிகளும் பருவமழையை பாதிக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடல் சூழலில், எல் நினோ காரணமாக கடல் வெப்ப அலைகள் அதிகரிக்கக்கூடும். இதனால் பவளப்பாறை சூழலியல் அமைப்புகளில் வெப்ப அழுத்தம் ஏற்படுவதுடன், கடல் கலப்பு, ஊட்டச்சத்து கிடைப்பது மற்றும் உயிரியல் உற்பத்தித்திறனில் மாற்றங்கள் ஏற்பட்டு, மீன்களின் பரவல் மற்றும் கிடைக்கும் தன்மையும் பாதிக்கப்படலாம். மேலும், அலை மற்றும் கடல் அலைச்சல் நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் கப்பல் போக்குவரத்து, கடல்சார் நடவடிக்கைகள் மற்றும் கடலோரச் செயல்பாடுகளையும் பாதிக்கக்கூடும் என ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

### புயல், உயர்அலை மற்றும் கடல் சீற்றத்திற்கான முன்னெச்சரிக்கை

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் கடல் சீற்றம், உயர்அலை, புயல் அலை மற்றும் வலுவான கடல் நீரோட்டம் உள்ளிட்ட பல்வேறு கடல்சார் அபாயங்களுக்கு முன்னெச்சரிக்கை வழங்குவதற்காக, INCOIS தனது உயர் துல்லியமான முன்னறிவிப்பு மாதிரிகளை தொடர்ந்து மேம்படுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடல் கண்காணிப்பை மேம்படுத்த Ocean Gliders, Mooring Buoys, Tide Gauges, Argo Floats மற்றும் செயற்கைக் கோள் கண்காணிப்புகள் உள்ளிட்ட பல்வேறு கடல் கண்காணிப்பு வலையமைப்புகள் விரிவுபடுத்தப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

மேலும், தரவுகளை ஒருங்கிணைத்து முன்னறிவிப்புகளின் துல்லியத்தை அதிகரிக்கவும், தாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட முன்னறிவிப்புகளை வழங்கவும் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. 24 மணி நேரமும் செயல்படும் கண்காணிப்பு, பல்வேறு தளங்களின் மூலம் எச்சரிக்கைகளை விரைவாகப் பரப்புதல், பயிற்சிகள், ஒத்திகைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆகியவையும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆழ்கடல் இயக்கத்திட்டத்திற்கு ரூ.145.06 கோடி

கடல் வளங்களை வரைபடமிடுவதற்கான ஆழ்கடல் இயக்கத்திட்டத்தின் (Deep Ocean Mission) கீழ், நடப்பு நிதியாண்டில் ரூ.145.06 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

கடல்வாழ் உயிரியல் வளங்களை ஆய்வு செய்யும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்தில் (EEZ) 32 கடலடிப் பருவமலைகளில் (Seamounts) உயிரியல் பல்வகைமை ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும், நடப்பு நிதியாண்டில் 10 கூடுதல் கடலடிப் பருவமலைகளில் ஆய்வுகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

கடல்வாழ் அல்லாத வளங்களை வரைபடமிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட உயர் துல்லிய புவியியல் ஆய்வுகளில், 4 செயலில் உள்ள நீர் வெப்பத் துளைகள் (Hydrothermal Vents) மற்றும் மத்திய இந்தியப் பெருங்கடல் பகுதியில் 2 சல்பைடு கனிமத் தளங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழகத்திற்காக 6 அலைமானி நிலையங்கள்

தமிழக கடற்கரைக்கு INCOIS சார்பில் கடல் அலை, காற்று, கடல் அலைச்சல், கடல் நீரோட்டம், கடல் மேற்பரப்பு வெப்பநிலை உள்ளிட்ட கடல் நிலவரங்களுக்கான முன்னறிவிப்புகள் 3 மணி நேர இடைவெளியில், அதிகபட்சம் 10 நாட்கள் வரை வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த முன்னறிவிப்புகளின் அடிப்படையில், தமிழக அரசுக்கும், குறிப்பாக தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கும் (TNSDMA) உயர்அலை, கடல் அலைச்சல், புயல் அலை மற்றும் வலுவான கடல் நீரோட்டம் தொடர்பான எச்சரிக்கைகள் வழங்கப்படுகின்றன.

தமிழகத்தில் எண்ணூர், சென்னை, நாகப்பட்டினம், தூத்துக்குடி, ராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் மொத்தம் 6 அலைமானி (Tide Gauge) நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி கடற்பகுதிகளில் Coastal Wave Rider Buoys அமைக்கப்பட்டு கடல் கண்காணிப்பு, சுனாமி முன்னெச்சரிக்கை மற்றும் கடல் நிலை முன்னறிவிப்பு சேவைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

கடலோர மாவட்டங்கள் மற்றும் மீனவ சமூகங்களின் பேரிடர் தயார்நிலை மற்றும் கடலோரத் தாங்குதிறனை மேம்படுத்தும் வகையில், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தொழில்நுட்பப் பயிற்சிகள், சுனாமி ஒத்திகைகள் மற்றும் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

---

## தேசிய நெடுஞ்சாலைகளில் சாலைப் பாதுகாப்பு குறியீடுகள் மேம்படுத்தப்பட்டுள்ளதா?

# பாதுகாப்பு அடையாளங்கள் எப்படி கண்காணிக்கப்படுகின்றன?

## மாநிலங்களவையில் – கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கேள்வி!



புதுடெல்லி, ஆக 9-

தேசிய நெடுஞ்சாலைகளில் சாலைக் குறியீடுகள் மற்றும் பாதுகாப்பு அடையாளங்களை மேம்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன? அவற்றை கண்காணிக்கும் நடைமுறை என்ன? என நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் மாநிலங்களவையில் கேள்வி எழுப்பினார்.

தேசிய நெடுஞ்சாலைகளில் சாலைக் குறியீடுகள் மற்றும் பாதுகாப்பு அடையாளங்களை மேம்படுத்த அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளதா என கேட்டார். அவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், அவற்றின் விவரங்கள் என்ன என்றும், சாலைக் குறியீடுகள் மற்றும் பாதுகாப்பு அடையாளங்களின் தரம் மற்றும் செயல்பாட்டை உறுதி செய்வதற்காக கடைப்பிடிக்கப்படும் கண்காணிப்பு நடைமுறை என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் ஜெய்ராம் கட்கரி எழுத்துப்பூர்வமாக பதிலளித்துள்ளார்.

தேசிய நெடுஞ்சாலைகளில் சாலைப் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பாக ஒன்றிய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து மாநிலங்களவையில் கேள்வி எழுப்பி, தமிழக மக்களின் சாலைப் பாதுகாப்பு தொடர்பான முக்கிய பிரச்சினையை கே.ஆர். என். இராஜேஸ்குமார் எம்.பி. கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

அதில், தேசிய நெடுஞ்சாலைப் (NH) பணிகள், இந்திய சாலைகள் காங்கிரஸின் (Indian Roads Congress IRC) தரநிலைகள், வழிகாட்டுதல்கள், கையேடுகள் மற்றும் நடைமுறைக் குறியீடுகள் (codes of practice) மற்றும் சாலை மற்றும் பாலப் பணிகளுக்கான விவரக் குறிப்புகளின்படி மேற்கொள்ளப்படுகின்றன.

வடிவமைப்பு, கட்டுமானம், செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு நிலைகளின் போது, விபத்துத் தடுப்புத் தடைகள் (crash barriers), குறியீட்டுப் பலகைகள் மற்றும் பாதுகாப்பு அடையாளங்கள், நடைபாதை மேம்பாலங்கள் போன்ற அவசியமான சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வணிக ரீதியான போக்குவரத்திற்குத் தேசிய நெடுஞ்சாலைகளைத் திறப்பதற்கு முன், புதிதாகக் கட்டப்பட்ட சாலைகளைச் சுதந்திரமாக மதிப்பீடு செய்வதற்காகச் சாலைப் பாதுகாப்புத் தணிக்கை (Road Safety Audit) நடத்தப்படுகிறது. சாலைக் குறியீடுகள் மற்றும் அடையாளங்கள் தொடர்பானவை உட்பட, கண்டறியப்பட்ட அனைத்துச் சாலைப் பாதுகாப்புச் சிக்கல்களும் சாலை பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறக்கப்படுவதற்கு முன்பே சரி செய்யப்படுகின்றன.

அதனைத் தொடர்ந்து, நெடுஞ்சாலைத் திட்டத்தின் செயல்பாட்டுக் காலத்தில், செயல்பாட்டு நிலையில் ஏற்படக்கூடிய பாதுகாப்புச் சிக்கல்களைக் கண்டறிய அவ்வப்போது மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன; மேலும், தேவையான சீர்செய்தல் நடவடிக்கைகள் காலக்கெடுவுக்குள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சாலைக் குறியீடுகள் மற்றும் பாதுகாப்பு அடையாளங்களைப் பொறுத்தவரை, அனைத்துச் சாலைக் குறியீடுகளும் சாலைத் தள அடையாளங்களும் (pavement markings), நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களின் படி இந்திய சாலைகள் காங்கிரஸின் (IRC) குறியீடுகளான IRC:67 (“சாலைக் குறியீடுகளுக்கான நடைமுறைக் குறியீடு”) மற்றும் IRC:35 (“சாலை அடையாளங்களுக்கான நடைமுறைக் குறியீடு”) ஆகியவற்றைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

மேலும், சாலைக் குறியீடுகள் மற்றும் அடையாளங்கள் தொடர்பான பல்வேறு செயல்திறன் அளவீடுகளைத் தொடர்ந்து கண்காணிப்பதை உறுதிசெய்யும் வகையில், தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கான ஒப்பந்த உடன்படிக்கையில் விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. உகந்த அளவிலான சேவையைத் தொடர்ந்து பராமரிக்கும் வகையில், ஒப்பந்ததாரர் தேவையான சீர்செய்தல் பணிகளை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்த ஒப்பந்தம் வலியுறுத்துகிறது.

சாலைக் குறியீடுகள் மற்றும் சாலைத் தளக் குறியீடுகள் (pavement markings) ஆகியவற்றின் தெரிவுநிலை மற்றும் செயல்பாட்டை மதிப்பிடுவதற்கும், அவை ஒப்பந்தம் அல்லது சலுகை ஒப்பந்தத்தின் (Concession Agreement) வரையறைகள், விவரக்குறிப்புகள் மற்றும் தேவைகளுக்கு இணங்க உள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கும், இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அண்மையில் “செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த டேஷ் கேம் பகுப்பாய்வு சேவைகள்” (AI Powered Dashcam Analytics Services) எனும் முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது என ஒன்றிய அமைச்சர் பதில் அளித்துள்ளார்



சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அயப்பாக்கம் ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி தலைமையில் மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள், மற்றும் இளைஞர் அணி, மகளீர் அணி மற்றும் பல்வேறு அணிகளைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினார்கள்.



கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்ட திருநின்றவூரில் வார்டு கவுன்சிலர் பி.எல்.ஆர்.தேவி யோகா ஏற்பாட்டில் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. உடன் நிர்வாகிகள் அன்பழகன், ரவி, தங்கராஜ், ஏகாம்பரம், ஜெயக்குமார், பாபு, ரவிச்சந்திரன், செந்தில் வேல், அசோக்குமார், கோபால், பால்ராஜ், சந்தோஷ் குமார், பெருமாள், தனசேகர், சுந்தர், கமல், பிரகாஷ், மு.பெ.சசிக்குமார், பிரசன்னா, ஆறுமுகம் சுரேஷ் குட்டியப்பன், ராகேஷ் கண்ணன் வேலாயுதம் பிரேக் மித்ராதேவி பிரகாஷ் சதீஷ் லோகேஷ் முரளி ஜனா உள்பட பலர் உள்ளனர்.

---

# கானல் நீரில் கப்பல் ஓட்ட நினைக்கிறார்

# ‘காகிதப் புலி’க் கனவான்!

கவிஞர் தமிழ்தாசன்
தி.மு.க தீர்மானக் குழுத் தலைவர்



ஆயிரம் பொதுக்கூட்டங்கள்; பத்து மாநாடுகள் தர இயலாத ஓர் எழுச்சியை இளைய தலைவர் கைது தி.மு.க.வுக்கு பெரும் சக்தியை கொடுத்திருக்கிறது. அதற்குக் கொள்கையற்ற கோட்டை கொடுமுடி ஜோசப் விஜய் அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

ரஷ்ய நாட்டு ஜார் மன்னன் ஏகாதிபத்திய ஆட்சியில்தான், எதிர்த்து ‘இம்..’ என்று முனங்கினாலோ, அல்லது ‘ஏன்?....’ என்று கேட்டாலோ, சைபிரியா பாலைவனம் போன்ற பனிப் பிரதேசங்களுக்குக் கடத்துவதன் மூலம் வனவாசம் அனுப்பி அவர்களுக்குக் கொடூரத் தண்டனை அளிக்கப்பட்டது. இப்போது ஜோசப் விஜய் எனும் பனையூர் பாசிசத் துக்ளக் ஆட்சியில் கேள்விகள் கேட்கும் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், தலைவர்கள் அனைவருக்கும் பொய் வழக்குகள், சிறை எனக் குவிந்து வருகின்றன.

இவர் காகிதப் புலி அல்ல; கலைஞரது கையும், மெய்யும் தழுவி உச்சி மோந்த வளர்ப்புப் புலி! இவர் துருப்பிடித்த ‘திருப்பாச்சி’ திரைப்பட அரிவாள் அல்ல; அவைக் களத்துக்கு வராத அட்டைக்’கத்தி’யும் அல்ல; இவர் திருக்குவளைக் கரு வளர்ந்த கந்தக ஸ்டாலின் உமிழ்ந்த காராக்கிரகம் வடித்த வேல்!

தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவரும், திமுக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மீது தமிழ்நாடு முதல்வர் ஜோசப் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக அரசு பொய் வழக்குப் புனைந்து சென்னையில் அவரது நீலாங்கரை இல்லத்தில் காலை 7.20 மணி அளவில் காவல் துறைப் பட்டாளத்தை குவித்துச் சுற்றி வளைத்துள்ளது. சென்னை உயர்நீதிமன்றம் 12 மணி வரை கைது செய்யக்கூடாது என்று கூறியபோதும் அதனை மீறி, காவல்துறை மூத்த அதிகாரிகளின் துணையோடு காலை 10.55 மணி அளவில் கைது செய்து, அலைக்கழிக்கப்பட்டுத் தஞ்சைக்கு இழுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்.

இரவு நெருங்கும் வேளையில் தஞ்சாவூர் கிழக்குக் காவல் நிலை யம் என்று அவரை அழைத்துச் சென்றவர்கள் அங்குச் சட்ட ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்று காரணம் காட்டி 6:45 மணி அளவில் அருகிலுள்ள செங்கிப்பட்டி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்குக் காவல்துறைக் கண்காணிப்பாளர் சுந்தரவதனம், துணைக் கண்காணிப்பாளர் அழகேசன் ஆகியோர் தலைமையில் சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கும் மேலாக உதயநிதி ஸ்டாலின் விசாரிக்கப்பட்டபின், அவர்; சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இரவு 8.15 மணி அளவில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

உதயநிதி ஸ்டாலின் தீவிரவாதியா? தேடப்படும் பயங்கரவாதக் குற்றவாளியா? அவர் முன்னாள் துணை முதல்வராக இருந்தவரல்லவா? தற்போது அவர் எதிர்க்கட்சித் தலைவர். இந்நிலையில் அவரை கைது செய்து தஞ்சைக்கு இழுத்துச்செல்ல வேண்டிய அவசியம் என்ன?

சட்டமன்றம் மறுநாள் இருந்தும் சபாநாயகர் ஒப்புதல் பெறப்பட்டதா? இது சர்வாதிகார ஆட்சியல்லவா?

சர்வாதிகார நாட்டில் கூட நடைபெறாத தனது ஏவல் துறையான காவல்துறையை ஏவிக் காட்டாட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார் தற்குறிகளின் தலைவன் ஜோசப் விஜய். தருமம் தவறிய அரசியல் சட்டங்களும் விதிமுறைகளும் கேலிக்குத்தாகும் நிலையைச் சாடிய பாரதியார், கொடுங்கோல் ஆட்சியில் நிகழும் நீதியின்மையைக் குறித்துப் “பேய் அரசு செய்தால், பிணம் தின்னும் சாத்திரங்கள்…” என்று கடுமையாகத் தான் எழுதிய பாஞ்சாலி சபதம் எனும் காவியத்தில் பாடியிருப்பார். ஆம்; இன்று கோட்டையில் அமர்ந்திருக்கும் ஒரு நகைச்சுவைக் கோமாளியின் சேட்டைகளால் நாடே சீரழிந்துக் கொண்டிருக்கிறது.

பிரமிடுகள் எழுப்பி பிணம் தின்னும் பேயாட்சி தொடர்ந்து கொண்டிருக்கின்றது… கோட்டையில் அமர்ந்துள்ள ஒரு ஜோக்கர் முதலமைச்சர் தலைமையில் ஆட்சி நடந்து கொண்டிருப்பதால் சட்டத்தின் ஆட்சி நடக்கவில்லை. உதயநிதி ஸ்டாலின் மீது அப்படி வழக்கு பதிவு செய்யப்படுவதற்கான காரணங்கள் என்ன? தி.மு.க. சார்பாகக் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் உத்தரவின் பேரில் தஞ்சாவூரில் விவசாயிகளுக்காக ஒரு மிகப் பெரிய கண்டன ஆர்ப்பாட்டம் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் ஆகஸ்ட் நான்கு அன்று நடந்தது. அக் கண்டன ஆர்ப்பாட்டக் கூட்டத்தில் கூட்டணி கட்சித் தலைவர்கள், விவசாயச் சங்கத் நிர்வாகிகள், விவசாயிகள், பொதுமக்கள் என நிறைய பேர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அதில் கலந்து கொண்டு 25 நிமிடம் உரையாற்றினார் உதயநிதி ஸ்டாலின்.

காவிரி நீர் விவகாரம் குறித்தும் மாநில உரிமைகள் குறித்தும் பொய் வாக்குறுதிகள் கொடுத்து முழுக்க முழுக்க ஜோசப் விஜய் நடத்தி வருகிற துரோகங்கள் குறித்தும், மேகதாது அணை கட்டுவதற்கு கர்நாடக அரசு தீவிரமாக முயற்சி செய்வது குறித்தும் பேசினார். அதே நேரத்தில் தமிழ்நாட்டு ஆளும் முதலமைச்சர் ஜோசப் விஜய் தொடர்ச்சியாக தி.மு.க. ஆட்சியில் திறக்கப்பட்ட மேட்டூர் அணை ஜூன் 12ம் தேதி திறக்காதது குறித்தும், அதனால் வறட்சியால் தஞ்சை பாலைவனமாக மாறிவிட்டது.

விவசாயப் பகுதிகள் காய்ந்து போனது பற்றியும் ஜூன், ஜூலை வரை கர்நாடகம் நமக்குத் தர வேண்டிய 42 டி.எம்.சி தண்ணீரைக் கர்நாடகம் தராதது குறித்தும் இதுவரை வாய் திறக்காதது ஏன் என்று முதலமைச்சர் விஜய் குறித்தும் பேசினார். ஆகவே இவற்றையெல்லாம் தமிழக விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற இந்த அவல நிலையை குறித்து சட்டமன்றத்தில் நான் பேசுவேன் என்று அறைகூவல் விடுத்தார். “நாம் ஒன்றாகச் சேர்ந்து போராடுவோம்; நம் ஒற்றுமையை காட்டுவோம்” என்று அவர் வலியுறுத்திப் பேசினார். இதற்குப் பதில் சொல்வதற்குத் தெம்பு இல்லாத; திராணியில்லாத; வக்கில்லாத ஒரு முதலமைச்சர் செயல்படாமல் இருக்கிறார் என்றெல்லாம் சுட்டிக்காட்டிப் பேசினார்.

ஆனால், அதையெல்லாம் விட்டு விட்டு அவர் பேசாத செய்தியை வெட்டியும், ஒட்டியும் பரப்பி வந்தனர். யாரையும் அவர் தவறாக பேசவில்லை. முழுக்க, முழுக்க விவசாயிகளுக்காக தான் பேசினார். ஆனால், கவனத்தை திசை திருப்பும் வகையில் பொய்ச் செய்தியைப் பரப்புவதில் முழுமூச்சாக ஜோசப் விஜய் அரசு செயல்பட்டு வருகிறது. அவருடைய ஆட்சியில் போஸ் கொடுக்க வேண்டியது; ரீல்ஸ் போடுவது; அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பள்ளிக் கூடத்திற்குச் சென்று அங்கு இருக்கக்கூடிய மாணவர்கள் எல்லாம் வரச் சொல்லி அவரது கட்சி பெயரைச் சொல்லி கோஷம் போடச் சொல்வது; அதை “ரீல்”சாக வெளியிடச் செய்வது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், அதற்கு மாறாக, அவர் மீது பொய் வழக்கு போட்டுத் திசை திருப்பும் நோக்கத்தில் செயல்பட்டு இருக்கிறார் ஜோசப் விஜய். அவரின் ஆட்சியில் சர்வாதிகார அலங்கோலங்களைப் பற்றிச் சட்டமன்றத்தில் மறுநாள் பேசுவார் என்று எண்ணி சட்டமன்ற கூடுகிற முதல் நாளில் இப்படித் திட்டமிட்டு வேண்டுமென்றே திசைதிருப்பு வகையில் அவரை முடக்க வேண்டும் என்பதற்காக அவர் மீது பொய் வழக்கு பாய்ச்சி சென்னையில் கைது செய்து, தஞ்சைக்கு இழுத்துச் சென்று, நீதிமன்றத்தின் உத்தரவால் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

இதனால் விஜய் அரசு தோற்றுப் போயிருக்கிறது. உதயநிதி ஸ்டாலின் அவர் பேசியது குறித்து அவர் மீது ஒன்பது பிரிவுகளில் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அதைப் படித்தாலே ஏன் இந்த ஆட்சி கோமாளியாக வெறித்தனத்தோடு திமுக மற்றும் தலைவர்கள் கைது செய்ய செயல்படுகிது என்பது தெள்ளத் தெளிவாக தெரிய வரும்.

உதயநிதி ஸ்டாலின் மீது வழக்குப் பதிவு செய்து அரசியலமைப்புச் சட்டத்தைக் காலில் போட்டு மிதித்து ஆணவக் கொக்கரிப்பில் அறிவிக்கப்படாத ஹிட்லரின் வாரிசாகத் தன்னைப் பறைசாற்றும் விதத்தில் கோட்டையில் அமர்ந்து, மக்களுடைய பிரச்சினையான புகையும் எரிமலையின் மீது அமர்ந்து கொண்டு புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருக்கிற ஜோசப் விஜய் அரசானது உதயநிதி ஸ்டாலின் மீது ஒன்பது சட்டப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்துள்ளது. மீது பதியப்பட்டுள்ள 9 சட்டப்பிரிவுகளின் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

1. BNS 61: குற்றச்சதி (Criminal conspiracy), section 79: words intenting to insult the modest of a women), 2.192: கலவரத்தை உண்டாக்கும் நோக்கில் தன்னிச்சை யாக தூண்டுதல் அளிப்பது. (Wantonly giving provocation with intend to cause riot) 3. BNS 196: வெவ்வேறு குழுக்களிடையே பகைமை அல்லது வெறுப்புணர்வைத் தூண்டுதல் (Promoting enmity hatred between different groups), 4. BNS 296 (b): பொது இடத்தில் ஆபாசமான வார்த்தை களைப் பேசுவது, ஆபாசச் செய்திகளில் ஈடுபடுவது (Uttering obscene acts in a public place causing annoyance), 5. BNS 79.BNS 35/351 (2): ஆகியவற்றுடன் தொடர்புடைய பெண்களின் மாண்பைக் குலைக்கும் பிரிவு. பெண்களின் கற்பு அல்லது மாண்புக்கு இழுக்கு ஏற்படுத்தும் நோக்கில் அல்லது வார்த்தைகள், சைகைகள், செயல்களைப் பயன்படுத்துதல் (word gesture or act intented to insult the modesty of a women), 6. BNS 351 (2): குற்ற வியல் மிரட்டல் விடுத்தல் (Criminal intimidation) 7. BNS. 352: பொது அமைதியைக் குறைக்கும் நோக்கில் வேண்டு மென்றே அவமதிப்பு செய்தல் (Intentional insult with intent to breach of the peace) 8. தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4. பெண்களைத் துன்புறுத்தல் அல்லது அச்சுறுத்தலுக்கான தண்டனை (Section 4 of Tamil Nadu prohibition of harrasment of Women Act.), 9. தகவல் தொழில்நுட்பச் சட்டப்பிரிவு 67: ஆகும். மின்னணு வடிவத்தில் ஆபாசமான அல்லது தவறான தகவல்களை வெளியிடுதல் பரப்புதல் (TNPHW Section 67). இது உண்மையில் I.T Act பிரிவு 67. ஆகும். திமுக ஐடி பிரிவினர் இந்த வீடியோவைப் பகிர்ந்ததால் இப்பிரிவு சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது)

மேற்குறிப்பிட்ட சட்டப்பிரிவுகளில் உதயநிதி ஸ்டாலின் வழக்கை உருவாக்கி நாடகமே நடத்தப்பட்டு இருக்கிறது ஜோசப் விஜய் அரசு. தினமலர் ஏடு இது குறித்து வெளியிட்ட செய்தியில் “உதய நிதியை தூக்கியே ஆகணும்” விஜய் வீட்டில் நடந்த நள்ளிரவு “மீட்டிங்” என்று தலைப்பிட்டு ஆகஸ்ட் 5ஆம் தேதி மூன்றாம் பக்கத்தில் செய்தி வெளியிட்டிருக்கிறது.

அந்த அளவுக்கு ஜனநாயகத்தை படுகொலை செய்யும் விதத்தில் ஈடுபட்டு வருகிற “ஜோசப் விஜய்யின் அரசை சர்க்கஸ் கூடாரா மாக நான் பார்க்கிறேன்; தஞ்சாவூரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் மேகதாது அணை, காவிரி நீர் திறப்பு போன்ற பிரச்சினைகளில் கர்நாடக அரசை எதிர்த்துப் பேச, த.வெ.க அரசுக்குத் தைரியம் இல்லை எனவும், மூன்று மாதங்களில் ஒவ்வொரு அமைச்சரும் என்ன செய்கின்றனர் என்பதையும் ஆதாரத்துடன் பேசினேன். இதற்குப் பதில் சொல்லவில்லை “டம்மி” முதல்வர் . நான் பேசாத ஒன்றைப் பேசியதாக வெட்டி, ஒட்டி, சில விஷயங்களை சேர்த்துப் பரப்பி வருகின்றனர்……” என்று உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்களுக்கு திருச்சி விமான நிலையத்தில் பதிலளித்திருக்கிறார்.

“பெண்களைத் தாழ்த்திப் பேசும் எண்ணம் துளியும் எனக்கு இல்லை; எனது தாய், தந்தை என்னை அப்படி வளர்க்கவில்லை; எனக்குத் திருமணம் ஆகி மனைவி இருக்கிறார். அவருடன் தான் வாழ்ந்து வருகிறேன். எனக்கு மகள், தங்கை இருக்கின்றனர்; தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு பெண்ணையும் தாயாக, தங்கையாக நினைக்கிறேன். ஆனால், பொய் வழக்கு போட்டு என்னைப் பயமுறுத்தலாம் என்று த.வெ.க அரசு நினைத்தது.

அதற்கெல்லாம் பயப்படுபவன் நான் அல்ல! நான் பேசியது முழுதாகக் கேட்காமல், சில தலைவர்கள் கண்டனம் தெரிவித்தது வருத்தம் அளிக்கிறது. கைதுக்கு நான் பயப்பட மாட்டேன்; இன்னும் நூறு முறை பேசுவேன்; இரட்டை அர்த்தத்தில் நான் பேசவில்லை. த.வெ.க அரசை ஆட்சியாக நான் பார்க்கவில்லை; சர்க்கஸ் கூடாரமாகப் பார்க்கிறேன். தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கைது; அதிமுக எம்.எல்.ஏ.க்களைச் சோபா அனுப்பி விலைக்கு வாங்க முயற்சி என இப்படிச் செயல்படும் முதல்வர் விஜய்க்கு மக்கள் தக்கப் பதில் கொடுப்பார்கள்” என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அறைகூவல் விடுத்திருக்கிறார்.

உதயநிதி பேச்சில் எங்காவது பெண்களை இழிவு படுத்தும் அவமானச் சொற்கள் இடம்பெற்று இருக்கின்றனவா? பெண்களின் கற்புக்கும், மாண்புக்கும் இழுக்கு ஏற்படுத்து வகையில் அவர் பேசி இருக்கிறாரா? அல்லது வார்த்தைகளோ, சைகைகளோ பயன்படுத்தியிருக்கிறாரா? பொது அமைதியைக் குலைக்கும் நோக்கில் வேண்டும் என்றே நடந்து கொண்டிருக்கிறாரா? கலவரத்தை தூண்டும் விதத்திலோ, தன்னிச்சையாகத் தூண்டுதலோ செய்யும் விதத்தில் நடந்து கொண்டாரா? அல்லது வெவ்வேறு குழுக்களிடையே பகைமை வெறுப்புணர்வு தூண்டுகிற முறையில் பேசி இருக்கிறாரா? என்பது குறித்து சாதாரண மனிதன் கூட அவருடைய உண்மையான பேச்சைப் படித்தால் அல்லது காணொளியில் கேட்டால் விஜய் அரசு போட்டிருப்பது அப்பட்டமான பொய் வழக்கு என்பது தெரிய வரும்.

அரசியல் எதிரிகளை வீழ்த்தலாம் என்று நினைத்து முசோலினி போல் முடியாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார். தான் போட்டிருக்கும் நாகரிக கோட்டும், கோட்டைத் தர்பாரும் சட்டத்தின் ஆட்சியில் நிரந்தரமானதல்ல என்பதை நாடாள்வோர் புரிந்து கொள்ள வேண்டும் நாணல்கள் வளைவதுண்டு; ஆனால், வீழ்வதில்லை! அது புயலைப் புறந்தள்ளி வானத்தை நோக்கி நிமிர்ந்து இருக்கும்.

பொய் வாக்குறுதிகள் தந்து கோட்டை ஏறி கொலுப் பொம்மையாக இருக்கும் அரசியல் வியாபாரியான ஜோசப் விஜய்யின் 2026 நிதிநிலை அறிக்கையைப் பெயர் மாற்ற அறிக்கை எனக் கூறலாம். தளபதி மு.க. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்பட்ட பொற்காலத் திட்டங்கள் யாவும் பெயர் மாற்றம் செய்து அறிவிக்கப்பட்டு இருக்கிறது . * “உலகம் உங்கள் கையில் “ எனும் திட்டம் (வெற்றி மடிக்கணினி), *”கலைஞரின் கனவு இல்லம்” (வெற்றி வீடு திட்டம்), “முதல்வர் படைப்பகம்” (டிஜிட்டல் நூலகம்) “அன்புச் சோலைத் திட்டம் (மூத்த குடிமக்கள் பொழுதுபோக்கும் மையங்கள்), முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் (பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம்) *நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம் (மண்ணின் மகள் திட்டம்), “விலையில்லா சைக்கிள் வழங்கும் திட்டம்” (நவீன மிதிவண்டி திட்டம்” என இப்படி அனைத்தும் பெயர் மாற்றம் செய்த துக்ளக் அரசுதான் இந்த ஜோசப் விஜய்யின் கோமாளி அரசு!

தேர்தல் காலத்தில் கோயபல்ஸ் வாக்குறுதிகளைத் தந்தவர் ஜோசப் விஜய். அவர் அறிவித்த வாக்குறுதிகள் அவரது நிதிநிலை அறிக்கையில் காணவில்லை. வெற்றித் தாள்களாக உள்ளன. அவர் கூறியபடி ஆண்டுக்கு 6 இலவச சிலிண்டர்கள் எங்கே? வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூபாய் 4,000 எங்கே? தகுதியுள்ள குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூபாய் 2,500 எங்கே?, ரூ.20 இலட்சம் வரை பிணையில்லாக் கல்விக்கடன் எங்கே? மாநிலம் முழுவதும் அனைத்து அரசுப் பேருந்துகளில் பெண்களுக்குக் கட்டணமில்லாப் பயணத்திட்டம் எங்கே?, விவசாயக் கடன் முழுவதும் இரத்து எங்கே? 25 இலட்சம் ரூபாய் வரை பிணையில்லாத் தொழில் முனைவோர் கடன் எங்கே? மீனவர்களுக்கு மீன்பிடி தடைக்காலத்தில் ரூ. 20,000 உதவித்தொகை என்று சொன்னாரே, எங்கே? இவை அனைத்தும் கானல் நீராகிப் போனது. காற்றடித்த பலூனாக உடைந்து போனது . நீர்க்குமிழிகளாகக் கண் சிமிட்டி அழிந்து போயின!

கானல் நீரில் கப்பல் ஓட்ட நினைக்கிறார் காகிதப் புலி ஜோசப் விஜய்.